

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் நகரத்தில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், இல.பத்மநாபன், மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, வசந்தம் நா.சேமலையப்பன், சூரிய பிரகாஷ், மு.சிவசபாவதி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.11.2025) சிவகங்கை மாவட்டத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக 2025–26ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு அரசு மேல்நிலைப்பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் மிதிவண்டிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சின்னுசாமி ஆகியோர் உள்ளனர்.

### தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு

# தேர்தல் ஆணையம் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்திட வேண்டும்!

## பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, நவ. 16 -**

**பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “பெரும் வெற்றியைப் பெற்றுள்ள மூத்த தலைவர் நிதிஷ் குமார் அவர்களுக்கு எனது பாராட்டுகள்” என்றும், “தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு தேர்தல் ஆணையம் நேர்மையான முறையில் தேர்தல்களை நடத்திட முன்வர வேண்டும்” என்றும் குறிப்பிட்டார்.**

**பீகார் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:**

அனைவருக்கும் பாடங்களை வழங்கியுள்ள பீகார் சட்டமன்றத் தேர்தல்:

**மூத்த தலைவர் நிதிஷ் குமாருக்கு பாராட்டுகள்!**

பெரும் வெற்றியைப் பெற்றுள்ள மூத்த தலைவர் நிதிஷ் குமார் அவர்களுக்கு எனது பாராட்டுகள். பீகார் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அவருக்கு எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஓயாமல் பரப்புரை மேற்கொண்ட இளந்தலைவர் தேஜஸ்வி யாதவ் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.

நலத் திட்ட விநியோகம், சமூக & கொள்கைக் கூட்டணிகள், நாம் சொல்ல வேண்டிய அரசியல்ரீதியான செய்தியைத் தெளிவாக மக்களிடம் சொல்வது, இறுதி வாக்கு பதிவாகும் வரை அர்ப்பணிப்புடன் தேர்தல் பணியாற்றுவது எனப் பலவற்றையும் ஒரு தேர்தல் முடிவு பிரதிபலிக்கிறது. இந்தியா கூட்டணியில் உள்ள அனுபவமிக்க தலைவர்கள் இத்தகைய செய்தியை உணரவும், இனி எழும் சவால்களை எதிர்கொள்வதற்கான திட்டங்களை வகுக்கவுமான ஆற்றலைப் பெற்றவர்கள்.

அதேவேளையில், இத்தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையத்தின் குளறுபடிகளையும் பொறுப்பற்ற செயல்களையும் இல்லாமல் ஆக்கிவிடாது. தேர்தல் ஆணையத்தின் மீதான மரியாதை இதுவரை இல்லாத அளவுக்குக் கீழிறங்கியுள்ளது. வலுவான, நடுநிலையான தேர்தல் ஆணையத்தைக் கோருவது நம் நாட்டு மக்களின் உரிமை. தேர்தலில் வெற்றி பெறாதோரின் நம்பிக்கையையும் பெறும் அளவுக்கு தேர்தல் ஆணையம் நியாயமான முறையில் தேர்தல்களை நடத்திட முன்வர வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் ஏற்பாட்டில்

# திருவிடைமருதூர் தொகுதி கழக நிர்வாகிகள் பயிற்சிப் பட்டறை!

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சிறப்புரை!

தஞ்சை, நவ.16.

தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) மற்றும் இளைஞர் அணி பாக முகர்வர்கள் பயிற்சி கூட்டம் சாரதா மஹாலில் நடைபெற்றது.

உயர்கல்வித்துறை அமைச்சரும், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான முனைவர் கோவி.செழியன் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சி கூட்டத்திற்கு தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும், கழக முதன்மை செயலாளரும், மண்டல பொறுப்பாளருமான கே.என்.நேரு தலைமை வகித்தார். தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, திருவிடை மருதூர் தொகுதி பார்வையாளர் முனைவர் குறிஞ்சிவாணன், கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றிய செயலாளர்கள் கோ.க. அண்ணாதுரை, கூகூர் சி. அம்பிகாபதி, உள்ளூர் டி. கணேசன், உதயா இரவிச்சந்திரன், மிசா.என். மனோகரன், ஜெ.சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை செயற்குழு உறுப்பினர் செ.இராமலிங்கம் அனைவரையும் வரவேற்றார். கலைஞர் தொலைக்காட்சி தலைமை செய்தியாசிரியர் திருமாவேலன் மற்றும் சிந்தனை எழுத்தாளர் மதிமாறன் ஆகியோர் தொடக்க உரையாற்றினர்.

இப்பயிற்சி கூட்டத்தில் தி.மு.க முதன்மை செயலாளர், அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது, தி.மு.க மீண்டும் ஆட்சி அமைக்க வாக்குச்சாவடி முகவர்கள் பணி மிக முக்கியமானது. இப்பயிற்சியில் அளிக்கும் முழு தகவலையும் தெரிந்து கொண்டு பணியாற்ற வேண்டும். நாம் இக்கட்டான கால கட்டத்தில் இருக்கிறோம். பீகார் தேர்தலில் ஜெயிக்கவே முடியாது என்று நினைத்தவர்கள் எல்லாம் ஜெயித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தற்பது நடைபெறும் பயிற்சி பட்டறையோடு நீங்கள் எஸ்.ஐ.ஆர். வேலைகளை பார்க்க வேண்டும். நான்காம் தேதி வரை அந்த வேலையில் முழு கவனம் செலுத்த வேண்டும். அதன் பிறகு எந்த வாக்காளர் பெயர் விடுபட்டுள்ளது, சேர்க்க வேண்டும் என்பதை சரியாக கண்டறிந்து அதை குறித்த தேதியில் ஒப்படைக்க வேண்டும். அப்படி எல்லாம் செய்ய தவறினால் ஓட்டு போட முடியாது. மாண்புமிகு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக ஆட்சி அமைய டெல்டா மாவட்டங்களில் உள்ள 40 சட்டமன்ற தொகுதியும் வெற்றி உறுதி செய்யப்பட வேண்டும்.

இதில் முக்கியமான காரணம் என்னவென்றால் மற்றவர்கள் கவனம் டெல்டா பக்கம் இல்லை இதை நாம் நல்ல வாய்ப்பாக பயன்படுத்தி வெற்றிக்காக பாடுபட வேண்டும் என்றார்.

இப்பயிற்சி கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம் தொகுதி), அன்னியூர் சிவா (விக்கிரவாண்டி தொகுதி), திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சார்பணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள், இளைஞர் அணி பாக முகவர்கள், மகளிர் அணியினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். முடிவில் ஒன்றிய செயலாளர் சுந்தர.ஜெயபால் நன்றி கூறினார்.

### அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு:

# தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் பாராட்டு!

## மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா. சண்முகநாதன் அறிக்கை!

புதுக்கோட்டை, நவ.16

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம் நா.சண்முகநாதன் பாராட்டு தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:-

மத்திய அரசுக்கு இணையாக மூன்று சதவீத அகவிலைப்படி உயர்வினை ஜுலை 1ஆம் தேதி முதல் வழங்கப்படும் என்ற அறிவிப்பு தமிழ்நாட்டின் 16 லட்சம் அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் வாழ்வில் மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடிய அறிவிப்பாகும்.

தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்காக தன் வாழ்நாளில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய சொன்னதைச் செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதையில் வந்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆசிரியர் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவார் என்ற பெரும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழக அரசு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் என்று ஏற்கனவே கூறியதைப் போன்று தற்போது 55 சதவீதமாக இருந்த அகவிலைப்படியை 1.7.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி உத்தரவு வெளியிட்ட தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு மீனவர் நல

# வாரியத் தலைவராக ஏ.ஜோசப் ஸ்டாலின் நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ. 16 -

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், புதிய உறுப்பினர்களை நியமித்து அரசு உத்தரவு அளித்துள்ளது. தமிழகத்தில் மீன்பிடிப்பு மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடும் மீனவத் தொழிலாளர்களின் விரிவான சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களது நலனை பேணும் பொருட்டும், கடந்த 2007ம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அமைக்கப் பட்டது.



உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மீனவர் நல வாரியம் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்தது. தமிழ்நாடு மீனவர் நல வாரியத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளபடி அலுவல் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை இரண்டாண்டு காலத்திற்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

மேற்படி நியமனம் செய்யப்பட்ட, தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவர் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டு காலத்திற்கு பதவி வகிப்பர்.

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் தலைவராக கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல், ஏ.ஜோசப் ஸ்டாலின் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அலுவல் சாரா உறுப்பினர்கள்: ஏ. தாஜுதீன், என்.ஜெ. போஸ், பி. அந்தோணி ஸ்டாலின், ஏ. ஜோஸ், வி. செல்வபாரதி, ஆர்.வி. கணேஷ், ஏ.பி. பன்னீர்செல்வம், எம். முருகன், எக்ஸ். லெனின், கோ. மனோகரன், எம். ஜெபமாலை பர்னாந்து, ஜேசுராஜா, பி.எஸ். ஜேசுராஜ் (எ) ராஜா, ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர். தமிழ்நாடு மீனவர் நல வாரிய உறுப்பினர் செயலர் என்ற முறையில் நல வாரியத்தின் செயல்பாடுகளை கண்காணிப்பார். இந்நல வாரியம் முதல் தரமான குழுவாகக் கருதப்படும். அலுவல் சாரா உறுப்பினர்களின் அகவிலைப்படி மற்றும் பயணப்படி போன்றவற்றிற்கு வாரியத்தின் உறுப்பினர் செயலரால் ஒப்பளிக்கப்பட வேண்டும். வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் அரசு பதவிகளில் இருந்தால், அவர்கள் நல வாரியத்திலிருந்து ஏனைய பயன்பாடுகளை பெறமுடியாது.

### பெரம்பலூர் மாவட்டம்

# ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம், பிரபாகரன் எம்,எல்,ஏ, பங்கேற்பு!

பெரம்பலூர், நவ. 16 –

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழு கூட்டம் செட்டிகுளத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் டாக்டர் செ. வல்லபன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க. சித்தார்த்தன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.அருண், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலபுரம் செல்வராஜ், துரை கந்தசாமி, கண்ணபிரான் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதில் வாக்காளர் சிறப்பு திருத்த பணிகள் குறித்து நிர்வாகிகளிடம் விரிவாக விவாதித்தனர். இந்த கூட்டத்தில் ஒன்றிய அளவில் கட்சி செயல்பாடுகள், தேர்தல் கள நிலவரம், தி.மு.க.விற்கு மக்களின் ஆதரவு, மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகள், வாக்குச்சாவடி அளவிலான பணிகள், 2026 தேர்தலில் 200 தொகுதியில் வெற்றி பெறுவது எப்படி, அதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் உள்பட பல்வேறு கட்சிப் பணிகள் குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டது.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி, திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் : 52, 55, மற்றும் பல்லடம் சட்டமன்ற தொகுதி வார்டு எண் : 57 ஆகிய பகுதிகளுக்கு திருப்பூர் தாராபுரம் சாலை வேலாயுதசாமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மத்திய மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் நேரில் பார்வையிட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் தெற்கு மாநகர கழக செயலாளர் டிகேடி மு.நாகராசன், மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் சி. நந்தினி, பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் மு.க.உசேன், மு.நந்தகோபால், தம்பி ப.குமாரசாமி, சுகாதாரக்குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 11 ம் வகுப்பு பயிலும் 367 மாணவ மாணவியர்களுக்கு ரூ. 17 இலட்சத்து 67 ஆயிரத்து 920 மதிப்பிலான மிதிவண்டிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் பத்மலதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மதன்குமார், பொதுக்குழு உறுப்பினர் பாலன் ,ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் , பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன், பர்கூர் பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.